# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | செப்டம்பர் 1991 | இதழ் 9



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் / புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு (இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்றுருட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. அப்போஸ்தலப்பட்டம் 1-6
2. பட்ச பாதமாய் நடவாதீர்கள் 7-11
3. ஆண்களை விட பெண்கள் தாழ்ந்தவர்களா? 12-14
4. தெரிந்து கொள்ளுங்கள் (பரிசுத்த வேதாகமத்தின் வரலாறு 15-19
5. பரிசுத்த ஆவியும் கிறிஸ்தவர்களும் 20-24
6. இரட்சிக்கப்பட்ட பிறகும் நித்திய ஜீவனை இழந்து விடக்கூடும்? 25-28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianit

Vol 4. September—1991 Issue 9


**ஆசிரியவுரை**

## அப்போஸ்தலப் பட்டம்

இன்றைக்கும் சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். வேறு சிலர் அதை மறுத்து அப்போஸ்தலப் பட்டம் மனிதனுடைய விருப்பத்துக்கும் சௌகரியத்துக்கும் சூடிக் கொள்கிற விருது அன்று, அது தேவனுடைய கிருபை வரம். தமது சித்தத்தின்படியும் தேவைக்கேற்பவும் தேவனே பகிர்ந்து கொடுக்கிறார் என்கின்றனர். இதில் யார் சொல்வது சரி என்பதை வேதாகமத்தின் துணைக்கொண்டு கண்டு பிடிப்போம். என்னோடு கூட வாருங்கள் ஏனெனில் மார்க்க சம்பந்தமான காரியங்களுக்கு வேதாகமம் தான் உரைகல் "**அப்போஸ்தலன்**" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொல்லுக்கு மூல மொழியாகி கிரேக்கத்தில் Apostolos என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சொல் புதிய ஏற்பாட்டில் சுமார் 80 இடங்களில் வருகிறது. வைத்தியன் லூக்காவும், அப்போஸ்தலன் பவுலும் மட்டும் சுமார் எழுபது முறை இச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இலக்கிய ரீதியில் பார்த்தால் அப்போஸ்தலன் என்ற சொல்லுக்கு "அனுப்பபட்டவர்" என்பது தான் உண்மையான பொருள். வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் தவிர வேறு சில நபர்களும் கூட அப்போஸ்தலன் என்று அர்த்தம் கொடுக்கும் சொற்களாலே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்காக சபை அனுப்பி வைக்கிற தூதர்களைக் கூட அப்போஸ்தலர் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக பிலிப்புப் பட்டணத்துச் சபை அனுப்பி வைத்த எப்பாப்பிரோ-

தீத்துவைச் சொல்லலாம் (பிலி 2:25) வேறு ஒரு இடத்தில் ஒரு சபை, தர்ம காரியத்துக்காக சேகரித்த பணத்தை வேறொரு சபையிலுள்ள ஏழைகளுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக அனுப்பி வைக்கிற நபர்களைக் கூட அப்போஸ்தலர் என்ற அர்த்தம் கொடுக்கும் ஸ்தானாபதி என்று குறிப்பிடுகிறது (2 கொரி 8:19-23),

எபிரேய நிருப ஆசிரியர் இயேசு கிறிஸ்துவையே கூட அப்போஸ்தலர் என்று குறிப்பிட்டிருக்கிறார். (எபி.3:1) ஏனெனில் அவர் தேவனால் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு அனுப்பப்பட்டார். அதுபோல இஸ்ரவேல் மக்களுக்குள் அனுப்பப்பட்ட ஊழியர்களைக் கூட அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. (லூக்கா 11:49).

கர்த்தருடைய சகோதரராகிய யாக்கோபையும் (கலா 1:19; 2:9) பவுலின் கூட்டாளியாக இருந்த பர்னபாவையும் (அப் 14:4; 14) அன்றோனிக்கையும், யூனியாவையும் கூட அப்போஸ்தல்ர்கள் என்று அழைக்கிறது (ரோமர் 16;7) அது அல்லாமல் சீலாவைக் கூட அப்போஸ்தலன் என்று பவுல் கூறுகிறாரா என்று சந்தேகம். (Iதெச 2:6) பவுலின் எதிரிகள் கூட கள்ள அப்போஸ்தலர்கள் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள் (2 கொரி 11:13)

இப்படி மேலே கூறப்பட்டடுள்ளபடி உள்ள அப்போஸ்தலர்களுக்கும் இயேசுகிறிஸ்துவினால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலருக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. முன் சொல்லப்பட்டவர்கள் சபைகளால் அனுப்பப்பட்டவர்களும், இயேசுவால் தமது ஆரம்ப நாட்களில் இஸ்ரவேலுக்குள் சென்று ஊழியம் செய்யும்படி அனுப்புவிக்கப்பட்ட எழுபது பேராகக்கூட இருக்கலாம், திட்டமாய் தெரியவில்லை (லூக் 10:1)

ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் சில சிறப்புத் தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புத் தொண்டர்கள். அவர்கள் சில சிறப்புப்பணிகளை நிறைவேற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். **முதலாவதாக** அவர்கள் இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற மீட்புப் பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருக்கும்படியாகவும் ஏற்படுத்தப்பட்டவர்கள் (யோவான் 15:16,27; அப் 1;8, 22, 2:32, 3:15; 4:20, 33;5:32; 10:39 1 யோவான் 1:1-4;) இயேசுகிறிஸ்துவின் செயல்பாடுகளையும் உயிர்த்தெழுதலையும் அவர்கள் நேரடியாகக் கேட்டும் பார்த்தும் இருந்தார்கள். **இரண்டாவதாக** கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களை இயேசு கிறிஸ்துவே நேரடியாகத்

தர்வு செய்து கொண்டார் (லூக்கா 6:13; அப் 1:2; 9:6; 22:16-18 கலா 1:1)

**மூன்றாவது** இந்த அப்போஸ்தலர்கள் இயேசுவின் போதனைகளைக் கூடவே இருந்து நேரடியாகக் கேட்டவர்கள். இப்படி அவர்கள் நேரடியாகக் கற்றுக் கொண்டது போக மீதியை அவரால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கற்றுக் கொண்டனர். யோவான் 16:13; 14:26.

**நான்காவதாக** இந்த அப்போஸ்தலர்கள் ஒரு குறிப்பிட்ட பிராந்திய சபையில் மட்டும் அல்ல; அனைத்துச் சபைகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அவர்கள் சபையின் ஒரே தலைவராகிய இயேசு கிறிஸ்துவின் சித்தத்துக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக் கொடுத்து தங்கள் பணிகளைச் செய்தார்கள். யோவான் 13:16;30;14:26;16:12-15 அப் 2:42: 1 கொரி 4:17; 11:2, 23 14:37 II கொரி 13:10.

**ஐந்தாவதாக** அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என்பதற்கும், தங்கள் செய்திகள் ஆவியினால் ஏவப்பட்டவை என்பதற்கும் ஆதாரமாக அநேக அற்புத அடையாளங்களைச் செய்து உறுதிப்படுத்தினார்கள் (அப் 2:43 எபி 2:2-4 அப் 5:19; 12:6-9, 9-37-40 8:2-7)

**ஆறாவதாக** அப்போஸ்த்லர்கள் மற்றவர்கள் மீது கை வைத்து அற்புதம் செய்யும் வரத்தை அளிக்கும் வல்லமை பெற்றிருந்தார்கள் (அப் 8:14-18 19:1-6 ரோமர் 1:11;2 தீமோ 1:6

**ஏழாவதாக** பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளைப் போல பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பரிசுத்த வேதாகமத்தின் சில நூல்களை எழுதினார்கள். எல்லா அப்போஸ்தலர்களுக்கும் இந்த பாக்கியம் கிடைக்காவிட்டாலும் ஒரு சிலருக்கு அந்த பாக்கியம் கிடைத்தது.

அதல்லாமல் இயேசுகிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் மிகவும் சிறப்பு நிலை பெற்றவர்கள் ''புதிய வானத்தையும், புதிய பூமியையும் பற்றி அப்போஸ்தலன் யோவான் கண்ட தரிசனத்தில் இஸ்ரவேலின் பனிரண்டு கோத்திரங்களின் பெயர்களை அதில் இருந்த பனிரெண்டு வாசல்களுக்கும், நகரத்தின் மதிலில் இருந்த பனிரண்டு அஸ்திபாரக்கற்களுக்கு ஆட்டுக்குட்டியானவருடைய பனிரண்டு அப்போஸ்தலர்களின் பெயரும் பதிக்கப்பட்டிருந்தன'' என்கிறார் (வெளி 21:13,14)

இந்தப் பனிரெண்டு பேர்களில் யூதாஸ் என்பவன் தன்னுடைய இழி மதியால் அகால மரணம் அடைந்தினால் அந்த மாபெரும் பதவியை இழந்து போனான். ஆதலால் அந்த ஸ்தானத்தை நிரப்ப வேண்டிய அவசியம் நேர்ந்தபடியால் அவருடைய ஸ்தானத்தில் மத்தியாஸ் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு மீதியுள்ள பதினொரு அப்போஸ்தலர்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அப் 1:26; 6:2. யூதாஸ் காரியோத்துக்கும் பதிலாக மத்தியாஸ் தேர்வு செய்யப்பட்டது போல ஒவ்வொரு அப்போஸ்தலருடைய மரணத்துக்கும் பிறகு அவர்களுக்குப் பதிலாக வாரிசுகள் தேர்ந்தெடுக்கப்படும் என்று நினைத்து விடக் கூடாது. ஏனெனில் (1) மத்தியாஸ் தேர்வு செய்யப்பட்டது ஒரு தீர்க்கதரிசன நிறைவேறல் (அப் 1:20 சங் 69:25; 109:8 (காண்க) (2) யூதாஸ்காரியோத்தின் மரணத்தினால் ஏற்பட்ட காலி ஸ்தானம் யூதாஸ்காரியோத்தின் மரணத்தினால் ஏற்பட்டது என்பதை விட அவனுடைய துரோகத்தின் விளைவாக பறித்துக் கொள்ளப்பட்டது என்பதே உண்மை (அப் 1:24) ஆகவே அப்போஸ்தலர்கள் பனிரெண்டு பேர் என்கிற நிலையை உறுதி செய்யும் வகையில் ஸ்காரியோத்தின் இழப்பை ஈடு செய்ய வேண்டியிருந்தது மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பொருந்தாது. (3) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒருவர் இயேசுகிறிஸ்து ஊழிய செய்த நாட்களில் அவரோடே கூட இருந்திருக்க வேண்டும் (அப் 1:21-22) (4) மத்தியாஸீக்கு, இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் கூடவே இருந்தது மட்டும் அந்தத் தகுதியைப் பெற்றுத் தந்து விடவில்லை. அப்படிப் பார்த்தால் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபாவுக்கும் கூட அந்தத் தகுதி இருந்தது. ஆனால் அப்போஸ்தலன் ஆக முடியவில்லையே (அப் 1:23) மேலும் இயேசு தாமே தம்முடைய ஊழிய நாட்களில் தம்முடைய அப்போஸ்தலர்களைத் தெரிந்துக் கொண்டார். மத்தியாஸ் விஷயத்திலும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. இங்கேயும் சீஷர்கள் வேண்டிக் கொண்டதென்னமோ உண்மை. ஆனால் தேர்ந்தெடுத்தது கர்த்தர்தான். அப் 1:23-26).

அப்படியானால் பவுல், அப்போஸ்தலன் ஆனது எப்படி என்று உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம். சவுல் என்னும் மறு நாமமுள்ள பவுலின் வரலாறு மிகவும் வித்தியாசமானது. "மனிதராலுமல்ல, மனிதர் மூலமாயுமல்ல இயேசு கிறிஸ்துவே அவரை நேரடியாகத் தெரிந்துக்கொண்டார். (கலா 1:1) அவர் கர்த்தரைத் தரிசித்தார் (அப் 22:14-15) (அப் 26:16-17 1 கொரி 9:1) அவருக்கு சுவிஷேசம் வெளிப்படுத்தப்பட்டது (1 கொரி 15:1-3; கலப 1:11,12)

சவுல் என்கிற பவுலுக்கு இயேசுகிறிஸ்து நேரடியாக போதனை செய்தார், சுவிசேஷத்தை வெளிப்படுத்தினார் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களே, நாங்கள் சொல்வதை மட்டும் ஏன் சந்தேகிக்-

கிறீர்கள்? என்று அங்கலாய்க்கிறார், நவீன கால அப்போஸ்தலர் ஒருவர். ஐயா, நீங்கள் சொல்வதையும், ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒரு நிபந்தனை. பவுல் செய்வதைப் போல நீங்களும் செய்து காட்டுங்கள். அவர் பல்வேறு விதமான அற்புத அடையாளங்களைச் செய்து, தான் எந்த அப்போஸ்தலனுக்கும் குறைந்தவன் அல்ல என்று நிரூபித்துக் காட்டினார் (ரோமர் 15:18; 2 கொரி 2:12 ; IIகொரி 11:5 ; அப் 14:10 ; 19:11-12;) அவர் ஆவியினால் ஏவப்பட்டு, மற்ற எவரைக் காட்டிலும் அதிகமாக புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதியிருக்கிறார். அந்நிய பாஷை வரத்தை அதிக அளவில் பெற்றிருந்தார் (1 கொரி 14:8) மரித்துப் போனவனை உயிரோடே எழுப்பினார் அப் 20:9-12 விஷப் பாம்பு கடித்தும் சேதம் ஒன்றும் ஏற்படாமல் சுகமாக இருந்தார். (அப் 28:6) நீங்களும் அப்படிச் செய்து காட்ட முடியுமானால் உங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயார், செய்வீர்களா?

அப்போஸ்தலர்கள் செய்த அற்புத அடையாளங்களை செய்து பேரும் பணமும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையால் போலியாகவும் கோமாளித்தனமாகவும் எதையாவது செய்து, கிறிஸ்தவத்தின் வாசனையைக் கெடுத்து, கிறிஸ்துவை வெட்கப்படுத்தி, உங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள முனைவோரே! **''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியங்களுக்குள்ளும் உங்களை நடத்துவார்''** என்ற வசனத்தை மீண்டும் ஒருமுறை ஜெபத்துடன் வாசித்துத் தியானியுங்கள் (யோவான் 16:13 அவர் வாக்கு மாறாதவர் என்பதை நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்களே. சகல சத்தியங்களும் முதலாம் நூற்றாண்டிலேயே வெளிப்படுத்தப்பட்டும் உறுதி செய்யப்பட்டும் நிறைவு பெற்று விட்டபடியினால் தானே வெளிப்படுத்தின விசேஷம் 22:18-19ல் மேற்கொண்டு ''எதையும் கூட்டவும் வேண்டாம், குறைக்கவும் வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தானே யாக்கோபும் நிறைவு பெற்ற புதிய ஏற்பாட்டை **பூர்ண பிரமாணம்** என்கிறார் (யாக் 1:25) அதாவது அவர் கூறியபடியே சகல சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டாயிற்று என்று அவர்கள் உறுதி செய்கிறார்கள். பின் ஏன் இந்த குழப்பமும் தடுமாற்றமும்?

அப்போஸ்தலர்கள் தவிர பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட பரிசுத்தவான்கள் கொஞ்சம் பேர் இருந்தார்கள் என்பது உண்மையே. அது சம்பந்தமாக 1 கொரி 12:28-31 வரை உள்ள, வசனப்பகுதிகளை வாசித்து தியானியுங்கள். அவர்களை தீர்க்கதரிசிகள் என்றும் போதகர்கள் என்றும், குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் நம்மைப் போன்று சாதாரண போதகர்கள் அல்ல. அவர்கள் அற்புதங்கள் செய்யும் ஆவியைப்பெற்றவர்கள் (1கொரி 12:11)

அந்த வரங்கள் எதற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதற்கு எபே 4:11-13 வரை உள்ள வசனப்பகுதியை வாசிப்போம். ''மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்.

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும்,

அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் என்கிறது. அவர்களை ஏற்படுத்தின நோக்கத்தையும், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தாமல் இல்லை ''நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலலித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்.

அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிற கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயுருக்கும் படியாக அப்படிச் செய்தார் என்கிறார் (எபே 4:14-15)

இன்னும் கொஞ்சம் பின்னோக்கி மீண்டும் கொரிந்தியர் முதலாம் நிருபம் 12!31ம் வசனத்துக்கு வருவோம் ''இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள். இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன் என்று கூறி விட்டு, கிறிஸ்தவத்தின் மையப்பொருளாகிய அன்பின் மாட்சிக்கு ஒரு முழு அதிகாரத்தையும் ஒதுக்கி விட்டு, அதன் இறுதியில் ஒரு கிறிஸ்தவனிடத்தில் நிலைத்து நிற்க வேண்டிய மூன்று முக்கிய காரியங்களாகிய விசுவாசம், நம்பிக்கை அன்பு ஆகியவைகளில் நிலைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார் (1கொரி 13:13)

ஆகவே ஆவியின் கனியாகிய அன்பு சந்தோஷம், சமாதானம் நீடிய பொறுமை, தயவு நற்குஊம் விசுவாசம், சாந்தம் இச்சையடக்கம் ஆகிய கிறிஸ்தவ உயர் பண்புகளைப் பெற நாடுங்கள்-வீண் பெருமைக்கும் வேண்டாத பதவிகளுக்கும் ஆசைப்பட்டு நேரத்தை வீணடிக்காதீகள். காலம் சமீபித்து விட்டது! நியாதிபதி வாசற்படியில் நிற்கிறார் நம் கணக்கை சரி பார்ப்போமாக!

E.Z. செல்வநாயகம்

# பட்ச பாதமாய் நடவாதீர்கள்.

ஆளுக்கு தகுந்தமாதிரி நடந்து கொள்வது மக்களுடைய வழக்கம். அதை ஒரு சாதுரியம் என்று நினைத்துக் கொண்டு பெருமைப்படுகிறவர்களும் உண்டு. ஒருவருடைய நிறம் ஒருவரிடம் இருக்கும் சொத்து, ஒருவர் சார்ந்துள்ள நாடு, ஒருவர் பேசும் மொழி இப்படியே எத்தனையோ காரியங்களைக் கணக்குப் போட்டுக் கொண்டு அதற்கேற்றபடி நடந்துக் கொள்வார்கள். இது வேதனைக்குரியது. மனிதர்களுடைய நியாயமான உரிமைகளைப் பாதிக்கிறது. இது இயல்பான சூழ்நிலையில் ஒரு மனிதன் செய்ய முடிகிற காரியத்தைச் செய்ய விடாமல் தடுக்கிறது. இந்த அநீதியான இழி குணம் மனித குலத்தை நாசப்படுத்திக் கொண்டிருக்கிறது. காலமெல்லாம் இது தொடர்ந்து அப்படியே நடக்கும் என்றுதான் தோன்றுகிறதேயல்லாமல் குறைவதற்கு வாய்ப்பில்லை.

ஆனால் நம்மை படைத்த தேவன் மனிதர்களைப் போல அநீதி செய்பவரல்ல **''தேவனிடத்தில் பட்ச பாத மில்லை''** என்கிறது *(ரோமர் 2:11)* எடுத்துக்காட்டாக அடிமைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பவுல் அப்போஸ்தலன் எபேசியருக்கு எழுதும் போது ''வேலைக்காரரே, **நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல சரீரத்தின்படி உங்கள்எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும், நடுக்கத்தோடும், கடபமற்ற மனதோடும் கீழ்படிந்து**

**மனுஷருக்குப் பிரியமாய் இருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியம் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.**

**அடிமையானவன் ஆனாலும் சுயதீனமுள்ளவன் ஆனாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைதவானென்று அறிந்து,**

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.**

**எஜமான்களே, அப்படியே நீங்களும் வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளை செய்து அவர்களுக்கும், உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்ச பாதம் இல்லை என்றும் அறிந்து கடுஞ்சொல்லை விட்டு விடுங்கள்'**

என்கிறார். (எபே 6:5-9). மேற்சொன்ன வசனங்களில் நாம் பார்க்கிறபடி அப்போஸ்தலன் பவுலும் கிறிஸ்தவர்களும் அடிமை தனத்தைப்பற்றி தெளிவான ஒரு நிலையை மேற்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவர்கள் அதை ஓரே நாளில் ஒழித்து விட முயற்சி செய்திருக்கலாம். ஆனால் அது அவர்களால் முடிந்திருக்காது. அப்படி அந்த விஷயத்தில் அவர்கள் தீவிரமாகவும் கடுமையாகவும் நடந்து கொண்டிருந்திருப்பார்களேயானால் அது நன்மைக்குப் பதிலாக தீமையாக முடிந்திருக்கும். அதற்குப் பதிலாக பவுல், கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட எஜமான்களையும் அடிமைகளையும் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று உற்சாகப் படுத்துகிறார். நாளாவட்டத்தில் கிறிஸ்தவம் அடிமைத் தனத்தை ஒழித்துவிடும் என்று அவர் நம்பினார். அதன்படியே நடக்கவும் செய்தது.

அது போல கொலோசே பட்டணத்தில் இருந்த சபையாருக்கு ''அநியாயம் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான். பட்ச பாதமேயில்லை'' என்று எழுதுகிறார் (கொலோ 3:25) அதைப்பற்றி பேதுரு ''அன்றியும் பட்ச பாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின் படி நியாயந் தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டு வருகிறபடியால் இங்கே பரதேசிகளாய் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்'' என்கிறார். (1:1-17)

யாக்கோபு இந்த விஷயத்தைக் குறித்து இன்னும் விரிவாகவும் பளிச் சென்று புரிந்து கொள்கிற மாதிரியாகவும் ''என் சகோதரரே மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்ச பாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக

ஏனெனில் பொன் மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது

மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி, நீர் இந்த நல்ல இடத்திலே உட்காரும் என்றும் தரித்திரனைப் பார்த்து, நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என், பாதபடியிலே உட்காரும் என்றும் நீங்கள் சொன்னால் உங்களுக்குள்ளே பேதகம் பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்கள் அல்லவா? என்று கேட்கிறார் (யாக், 2:14) இம்மாதிரி நிகழ்ச்சிகள் இன்றும் கூட நம்மிடையே சர்வ சாதாரணமாக நடக்கிறதில்லையா? கர்த்தருடைய சபையிலும் இது விதிவிலக்கல்ல. இம்மாதிரி

மனிதனுக்கு மனிதன் வேறுபாட்டைக் காண்பிப்பதை நாமும் ஏற்றுக்கொண்டுதானே நடந்துகொண்டிருக்கிறோம்'

தேவன் கிறிஸ்துவை இவ்வுலகத்துக்குக் கொண்டு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட இனத்தை ஆயத்தம் செய்ததால், யூதர்கள் தாங்கள் புறஜாதியாரைக் காட்டிலும் விசேஷித்தவர்கள் என்று எண்ண ஆரம்பித்து விட்டனர். ஆனால் கர்த்தராகிய இயேசு இந்த உலகத்துக்கு வந்து யூதரை மட்டுமல்ல புறஜாதியாரையும் இரட்சிப்பதற்கு தன் ஜீவனை விட்டபடியால் யூதர்களுடைய எண்ணம் தவறானது என்று வெளிப்படுத்தி விட்டார். அவர் எல்லாரையும் ஒன்று போல நேசிக்கிறார். இதை நிலை நிறுத்துவதற்குத் தான் பேதுரு புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான்'' அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி **''தேவன்பட்சபாதமுள்ளவர் அல்ல என்றும்,**

''எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்று'' பேதுரு கூறுகிறார் (அப் 10:34-35) பேதுரு இப்படித் தன்னை மாற்றிக் கொண்டதற்கு, ''நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்கிற'' இயேசு கிறிஸ்துவின் கட்டளையே காரணம் (மாற்கு 16:15-16)

கர்த்தர் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கும் தம்மை முதன்மையாக நேசிக்கிறவர்களிடத்திலும், தமக்கு உண்மையாய் நடந்து கொள்பவர்களிடத்திலும் விசேஷித்த அன்பு பாராட்டினாலும் மற்றவர்களையும் நேசிக்காமலில்லை. உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பினைத் தருகிறார். சபையில் சேரும் சிலாக்கியத்தையும் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஈடுபாடு கொள்வதற்கும் பரலோகம் செல்வதற்கும் வழியைத் திறந்தே வைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்பு நாளிலும் கூட பட்சபாதமில்லாமல் அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்கதாக பலன் அளிப்பதாகவே வாக்களித்துள்ளார். (2கொரி 5:10)

நாம் கர்த்தருடைய பிள்ளைகள். மனிதர்களிடையே பட்சபாதமல்லாமல் அன்பு கூருவது உட்பட அனைத்துக் காரியங்களிலும் கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்க வேண்டும். ஒரு சிலரை அதிகமாக நேசித்துக்கொண்டு வேறு சிலரை, ''இவர்கள் திருந்தவே மாட்டார்கள்'' என்று எண்ணி ஒதுக்கி விடக்கூடாது. ஏழ்மையில் உழல்பவர்களை உதாசீனம் செய்து செல்வந்தர்களை தேவைக்கு

அதிகமான மரியாதை கொடுத்து குழைந்து நெளியவும் அவர்கள், செய்கிற தவறுகளைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதும் கூடாது.

பல நேரங்களில் விக்கிரக ஆராதனையில் மிகவும் வெறி-யாக இருப்பவர்கள், அரசியல்வாதிகள், வயதானவர்கள், விளை-யாட்டு, களியாட்டுகள் ஆகியவைகளில் 'அதிக ஈடுபாடு' கொண்டு சதா அலைந்து கொண்டு திரிகிற மக்கள் ஆகியவர்களை நாம் கிறிஸ்துவுக்குள் ஒருநாளும் கொண்டு வர முடியாது என்று நாமே முடிவு செய்து கொண்டு அவர்களைப் பற்றி சிந்திக்காமலே விட்டு விடுகிறோம். அதுவும் ஒரு வகையான பட்சபாதம் தான். சில மக்கள் தான் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள் என்று நாம் முன் கூட்டியே தீர்மானித்துக்கொண்டு அவர்களிடமே போய் சுவிசேஷத்தைச் சொல்வதும் அவர்களைச் சுற்றிச் சுற்றியே வலம் வருவதும் காரணமாக கிறிஸ்தவம் ஒரு சில குறிப்பிட்ட சமுதாயத்தைத் தவிர மற்றவர்களிடம் அறிமுகம் ஆகாமலும், சபை போதிய அளவு வளராமலும் இருக்கிறது என்றால் மிகையாகாது.

நாம் இயேசு கிறிஸ்து கட்டளையிட்டபடி எல்லா ஜாதிக்-காரர், பாஷைக்காரரிடமும் சுவிசேஷத்தை அறிவிப்போமானால் நிச்சயமாகவே சமுதாயத்தின் பல மட்டங்களிலும் வாழ்கிற மக்கள் கிறிஸ்துவின் அன்பையும், தியாகத்தையும் புரிந்துக் கொண்டு இரட்சிப்படைவார்கள் என்பது நிச்சயம். அவர்களும் நம்மைப் போன்ற எல்லா உணர்வுகளும் உள்ள மக்கள் தான். அவர்களுக்கும் சில பலவீனங்களும், தீர்க்க முடியாத பிரச்னைகளும் உண்டு. அவர்களுக்கும் உதவியும், ஒத்தாசையும் தேவை. அவர்களுடைய வசதி, வாய்ப்புகள் அவர்கள் மேற்கொண்டுள்ள தொழில்கள் அவர்களுடைய விக்கிரக வழிபாட்டில் உறுதிப்பாடு என்று பலவிதமான காரியங்களினால் அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்க மாட்-டார்கள்; கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று உதாசீனப்படுத்துவதும், அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லாமல் இருப்பதும் ஒரு வகை பட்சபாதம். இது நமக்குச் சம்பந்தமில்லாத விஷயம் போல் இருக்கிறது. பணக்காரர்கள், உலகியில் பற்றுள்ள-வர்களை கிறிஸ்து இயேசு இரட்சிக்கமாட்டார் போல் இருக்கிறது என்று அவர்களும் இதில் அக்கரை காட்டாமல் இருக்கிறார்கள். இந்த குறையை நீக்கி அவர்களிடத்தில் அன்பு கூருங்கள். அவர்-களுடன் நட்புறவோடு நடந்து கொள்ளுங்கள் அப்பொழுது அவர்களும் பெரிய அளவில் கிறிஸ்தவத்தில் அக்கரை காட்டி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

சுவிசேஷம், இரட்சிப்பு என்று வரும் போது எந்த ஒரு தனி மனிதனையும், கூட்டத்தையும், அவர்களின் செல்வம் காரண

மாகவோ, சார்ந்துள்ள மதம் காரணமாகவோ, அவர்களுடைய தொழில் காரணமாகவோ அலட்சியபடுத்தாதீர்கள், ஒதுக்காதீர்கள். அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க தயங்காதீர்கள். நாம் ஏதாவது விஷயங்களில் ஒதுக்கப்படுவதை நாம் விரும்பமாட்டோம். இயேசு கிறிஸ்துவும் ஒருவரையும் உதாசீனப்படுத்தவில்லை. செல்வந்தன், விபச்சாரி, ஏழை, கெட்டபுத்தியுள்ளவன் என்று காரணம் காட்டி ஒருவரையும் அவர் நிராகரிக்கவில்லை என்று நினைத்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

நாம் இன்னும் பாவிகளாக இருந்த பொழுது அவர் நமக்காக மரித்ததினால் தான் இன்று நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். நாமும் அவரைப் பின்பற்றி மற்றவர்களையும் இரட்சிப்புக்குள் நடத்த முயல்வோம். ''நாம் மற்றவர்கள் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறோமோ அதை நாம் மற்றவர்களுச் செய்வோம் (மத் 7:12)

J.C. சோட்

**கர்த்தருடைய ஊழியக்காரர்களின் பொறுப்பு**

*நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.*

*சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனை தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.*

*நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற் போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான் நீ போவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்.*

## பெண்கள் பகுதி

# ஆண்களை விட பெண்கள் தாழ்ந்தவர்களா ?

ஆண்களை விடப் பெண்கள் தாழ்ந்தவர்களா? இறைவனுடைய படைப்பில் பெண்கள் இரண்டாம் தர மக்களா? பலர் வாய் திறந்து 'ஆம்' என்று சொல்லத் துணியார்கள். பெண்களும் கூட 'ஆம்' என்று சொல்லுவதற்கு தயங்குவார்கள் ஆனால் அவர்களை அறியாமலே ஆம்..என்று ஒத்துக்கொள்வார்கள்,

பின்னே ஏன் பெண்களை அதிகார பீடத்தில் அமர்த்தினால் அவர்கள் கடுமையாகவும் கறாராகவும் நடந்து கொள்கிறார்கள்? ஒருவேளை காலமெல்லாம் தான் மற்றவர்களுடைய அதிகாரத்துக்கு அடிபணிந்தே பழகிவிட்டபடியால் இப்பொழுது வாய்ப்புக் கிட்டிய பொழுது அதைப் பூரணமாய் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார் களா? ஒரு பெண் ஒரு கடையை நடத்தும் வாய்ப்புப் பெற்றால் அவள் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்கிறாள், உலகுக்கும் தன் கணவனுக்கும் 'நான் ஒன்றும் உங்களை விட மட்டமில்லை'' என்று காட்டிக் கொள்ளும் ஆர்வத்தினாலா?

ஆனால் தாய்க்குலமே! நீங்கள் உங்களுடைய தகுதியை நிரூபிப்பதற்கு ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு கடின மாகவும் சமரச முயற்சிகளை நிராகரித்து இரக்க மற்றவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டியதில்லை. ஆணும், பெண்ணும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொள்ள வேண்டும் என்று தேவர் அவர்களைச் சிருஷ்டிக்கவில்லை. அவர்கள் ஒரு ஜோடியாக இணைந்து ஒருவரோடொருவர் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டுமென்றே அவர் விருப்பமும் நோக்கமுமாகும்.

நேற்றைய தினம் ஒரு பீங்கான் தட்டைக் தவறிக் கீழே போட்டு விட்டேன். தட்டு இரண்டாக உடைந்து அதனுடைய விளிம்புகள் ஏற்றியும் தாழ்த்தியுமாக இருந்தது. அவைகளை மெதுவாக எடுத்து ஒன்றோடொன்று பொருந்தும்படி இணைத்தேன். என்ன ஆச்சரியம்! ஏற்றியும் தாழ்த்தியுமாக இருந்த அதன் ஓரங்கள் சீராகப் பொருந்தி முன்பு இருந்தது போலவே முழுமையாகக் காணப்பட்டது. அதுபோல ஒரு ஆணாவது ஒரு பெண்ணாவது நான் உடைத்துப் போட்ட பீங்கான் தட்டின் ஒரு பகுதியை போலத்தான் இருக்கிறார்கள் தேவன் ஒரு ஆணையும் பெண்ணையும் படைக்கும் போது அவர்கள் இருவரும் சேர்ந்து முழுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் படைத்திருக்கிறார், போட்டி போட்டுக் கொள்வதற்காக அல்ல.

ஆணுடைய சரீரமும் பெண்ணினுடைய சரீரமும் வித்தியாச மானது. அதனால். ஒன்று மற்றதை விடத் தாழ்ந்தது என்று

பொருளில்லை. அவர்கள் எந்த நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டார்களோ, அந்த நோக்கத்தின் தேவைக்கேற் வே படைக்கப்பட்டிருக்கிறார்கள். இயற்கையாகவே ஆண் பெண்ணைவிட பல சாலியாக இருக்கிறான். ஏனெனில் அவர் குடும்பத்தின் தேவை களுக்காகச் சம்பாதிப்பனாகவும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய வனாகவும் இருக்கிறான் ஏன்? ஒருபெண் ஓட்டப்பந்தயத்தில் ஆணுக்குச் சமமாக ஓடமுடியவில்லை? ஏனெனில் அவளுடைய இடுப்பு எலும்புகள் ஆண்களுடையதைப் போல அல்லாமல் குழந்தைப் பேற்றுக்குத் தேவையானபடி படைத்தவரால் உருவமைக்கப்பட்டிருப்பதால் தான்.

ஏன், ஒரு ஆனும் பெண்ணும் உணர்வுகளில் ஒரே மாதிரி இல்லெ? ஆண் குடும்பத்தின் தேவவகளை நிறைவேற்ற வேண்டியவனாகையால் வெளியே செல்லவும் பலவிதமபன் வேலைகளைச் செய்யவும் பலதரப்பட்டவர்களைச் சந்திக்கிறவனாயும்இருக்கிறுன். ஆகவே அவன் நிதானமாகவும் பிரச்சனைகளுக்குத் தக்கவாறு தன்னை சரி செய்து கொள்ளவும் வேண்டியிருக்கிறது. அதே போல் ஒரு பெண்ணின் கடமைகளாகிய குழந்தைகளைப்பெற்று பேணி வளர்த்து, கணவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை ஆகியவைகளையுடையவர்களாக இருக்கிறாள்.

வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளையெல்லாம் உற்றுக்கவனித்து கணவன், பிள்ளைகள் ஆகியோரிடையே அன்பை பெருக்கவும் சமாதானத்தை நிலை நாட்டவும் வேண்டியது பெண்ணின் பொறுப்பு பெண்கள் சரீரத்தில் பலவீனமானவர்களாகவும் ஆண்களைக் காட்டிலும் மென்மையானவர்களாகவும் இருந்தாலும் அவள் உற்சாகத்திலும் குணத்திலும், பலவீனமுள்ளவள் அல்ல. ஒரு சமயம் கணவன் சோர்ந்துபோய் வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் நடந்து கொண்டால் உடனே மனைவி அவனை உற்சாகப்படுத்தி ஆறுதல் கூறி எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொடுத்து ஊக்குவிக்கிறாள். இப்படி ஒருவருக்கொருவர் தேவன் விரும்பியபடியே உற்சாகப்படுத்திக் கொள்கின்றார்கள்.

ஆன்மீக விஷயங்களில் பெண்களின் பங்கு இன்னும் சிறப்பானது. பெண்ணுக்கு வேதத்தை வாசிக்கவும் தியானிக்கவும், ஜெபிக்கவும் அதிக நேரம் கிடைக்கிறது. குழந்தைகளோடு அதிக நேரத்தை கழிக்கிறபடியால், அவர்களுக்கு நல்ல விஷயங்களைக் கற்றுக் கொடுக்க முடியும். ஆன்மீக காரியங்களில் கணவனுக்கு உற்சாகம் கொடுக்க முடியும். இப்படிச் செய்வதின் மூலமாக ஒரு

கிறிஸ்தவ மனைவி முழுக்குடும்பத்தையும் தேவனுடைய ஆசீர்வாதத்துக்குள் கொண்டு வர முடியும்.

ஆகவே, ஒரு பெண் ஒரு ஆணுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்தவள் கிடையாது. அவர்கள் இருவரும் இணைந்து பாடுபட்டு தேவன் அவர்களைப் படைத்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கு முயல வேண்டும். இப்படி ஞானமாய் ஆணையும் பெண்ணையும் படைத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தமிழில் : ரேச்சல் ராஜநாயகம் பெட்டிபர்ட்டன் சோட்

## நீதிமான் யார்?

(எசே 18:5-9)

1. நியாயத்தையும் நீதியையும் செய்து
2. மலைகளின் மேல் சாப்பிடாமலும்
3. இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களையேறெடுக்காமலும்
4. தன் அயலானுடைய மனைவியைத் தீட்டப்படுத்தாமலும்
5. தூர ஸ்திரீயோடே சேராமலும்
6. ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலும்
7. கடன் வாங்கினவனுக்கு அடமானத்தை திருப்பிக் கொடுத்து
8. தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு
9. வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து
10. வட்டிக்குக் கொடாமலும்
11. பொலிசை வாங்காமலும்
12. அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி
13. மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து
14. கர்த்தருடைய கட்டளையின்படி நடந்து, உண்மையாயிருப்பவனே.

# தெரிந்து கொள்ளுங்கள்

## பரிசுத்த வேதாகமத்தின் வரலாறு

விவிலியம் என்னும் பரிசுத்த வேதாகமம் மனுக்குலத்துக்கு தேவனால் அருளப்பட்ட கருத்துக் கருவூலம். இது ஆன்மா வழி காட்டியாகவும், வாழ்க்கைச் சட்டமாகவும் விளங்குகிறது. பரிசுத்த வேதாகமம் ஒரே நூலாகத் தோற்றமளித்தாலும் உண்மையில் அது பல நூல்கள் அடங்கிய ஒரு நூலகம் என்றே சொல்லலாம். இதில் பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் இருபெரும் பிரிவுகள் உண்டு.

பழைய ஏற்பாட்டில் 39 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் இருக்கின்றன. அவை பல்வேறு கால கட்டங்களில் குறைந்த பட்சம் மூன்று மொழிகளில் சுமார் நாற்பது ஆசிரியர்களைக் கொண்டு எழுதப்பட்டது. அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு எழுதினபடியால் ஒன்றுக்கொன்று இணக்கமாகவும் எவ்வித முரண்பாடும் இல்லாமல் இருக்கின்றன. *(2பேது 1:21;) (2 தீமோ 3:16-17)*

பழைய ஏற்பாட்டின் முதல் நூலான ஆதியாகமம் எழுதப் பெற்று சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் புதிய ஏற்பாட்டின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டது. காலப்போக்கில் அவையாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே தொகுப்பாகியது.

விவிலியம். ஆயிரக் கணக்கான மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது, அந்த மொழிகள் அனைத்தும் அம்மொழியாக்கத்தின் விளைவாக பெரும் வளர்ச்சியடைந்தன.

தமிழும் அதற்கு விதிவிலக்கல்ல. சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வேத வசனங்களில் சில பகுதியும் கிறிஸ்தவ மார்க்க சம்பந்தமான நூல்களும் தமிழில் வரத் தொடங்கின. ஆனால் சுமார் 285 ஆண்டுகளுக்கு முன்பு விவிலியம் முதன் முறையாக முழுமையாக மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டுப் பாமரர்களுக்கும் பயன்படும்படி எளிய விலையில் விநியோகிக்கப்பட்டன. ஏறக்குறைய அழிந்தே போயிருந்த தமிழ் பேச்சு நடை புத்துயிர் பெற்றதும், வளர்ந்ததும் இலக்கிய வாகனமாக உருவெடுத்ததும் இந்த வேதாகம மொழியாக்க முயற்சியினால் தான் என்றால் மிகையாகாது.

பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான நூல்களின் மூலமொழி எபிரேயம் ஆகும். எபிரேயம் தொன்மையான மொழிகள் என்று கருதப்படுகிற தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுக்கு இணையான பழம் பெரும் மொழி. யூதர்களின் மொழியான இம்மொழி இப்போது பேச்சு வழக்கொழிந்து விட்டது. யூதர்களின் பழமையான புனித நூல்கள் அனைத்தும் அம்மொழியில்தான் எழுதப்பட்டிருந்தன. பழைய ஏற்பாட்டில் உள்ள நூல்களும் தள்ளுபடி ஆகமம் என்கின்ற நூலில் காணப்படுகிற சில நூல்களும் சேர்ந்து தான் யூதர்களின் மத நூல்கள் அடங்கிய வேதம் ஆகும்.

பழைய ஏற்பாட்டின் பிற்பகுதியில் உள்ள சில நூல்கள்-எபிரேயத்தின் கிளை மொழியான அரமேயம் என்ற மொழியில் எழுதப்பட்டன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்பூலோகத்தில் வாழ்ந்த காலத்தில் அரமேயம் வழக்கில் இருந்தது. புதிய ஏற்பாட்டின் நூல்கள் அனைத்துமே கிரேக்க மொழயில் எழுதப்-பட்டவை.

ஆக எபிரேயம், அரமேயம், கிரேக்கம் ஆகிய மூன்றும் தான் வேதாகமத்தின் மூலமொழிகளாகும். அவற்றிலிருந்து தான் உலகின் பிற மொழிகளுக்கு யூத, கிறிஸ்தவ வேதம் கிடைத்தது. தமிழ் நாட்டில் கடந்த இரு நூற்றைம்பது ஆண்டுகளாக கிறிஸ்தவ, சமயம் ஆங்கிலேயருடன் அதிகமாக சம்பந்தப்பட்டிருந்ததால் தமிழ் வேதாகமம் ஆங்கில மொழியிலிருந்துதான் மொழியாக்கம் செய்யப் பட்டது என்று கூட பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அது தவறு.

பழைய ஏற்பாட்டை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம். எண்ணாகமம் உபாகமம் ஆகிய ஐந்து நூல்களும் முதற்பகுதியில் அடங்கும். இவற்றை நியாயப் பிரமாணம் என்றும், பஞ்சாகமம். என்றும் அழைக்கின்றனர். இவற்றில் யூத மார்க்கச் சட்டங்களும் மற்றும் வழிபாட்டு முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. வழிபாட்டு முறைகள் மிகுதியாகச் சொல்லப்பட்டிருப்பதால் தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள் அவற்றுக்கு **ஆகமம்** என்ற விகுதியை சேர்த்துக் கொண்டனர். தமிழில் ''ஆகமம்'' என்பது வழிபாடு முறைகளைக் குறிக்கும் சொல். ஆதியாகமத்திலும், யாத்திராகமத்திலும் வரலாற்றுக் குறிப்புகளே அதிகம். ஆதியாகமத்தில் சொல்லப்பட்-டிருப்பவை யூதர்கள் பற்றிய விவரங்கள் மட்டும்அல்ல; பாபிலோனியர்களின் புராணங்களும் அதில் கலந்திருக்கலாம் என வேத அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்

புஞ்சாகமங்கள் என்னும் நியாயப்பிரமாணம் மோசேயினால் எழுதப்பட்டன என்று வேதாகமம் பல்வேறு இடங்களில் கூறுகிறது. மரபும் அதை ஒத்துக்கொள்கிறது. ஏறத்தாழ சுமார் 3500 ஆண்டுகளுக்முன்பு அதாவது 1500வாக்கில் அவை எழுதப்பட்டிருக்கலாம். எபிரேய மொழியில் எழுதப்பட்ட இந்நூல்கள் தேவன் அருளிய வாக்குகள் என்பதால் யூதர்களின் புனித பெட்டியாகிய உடன் படிக்கைப் பெட்டியில் அவைகளை வைத்துப் பாதுகாத்தனர்.

இரண்டாவது பகுதியில் **தீர்க்கதரிசன நூல்கள்** இடம் பெறும். யூதர்களின் சமய பாரம்பரியத்தில் தீர்க்க தரிசனம் முக்கிய இடம் வகித்தது. எடுத்துகாட்டாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ப்பு, மரணம் உயிர்த்தெழுதல் ஆகியவைகள் தீர்க்கதரிசன நூல்களில் முன்னுரைக்கப்பட்ட படியே நிறைவேறின என்றும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் நம்புகின்றனர். பெரும்பாலான தீர்க்க தரிசன நூல்கள் எபிரேய மொழியிலும், பிற்காலத்தில் எழுதப்பட்ட சில நூல்கள் அரமேய மொழியிலும் எழுதப்பட்டிருந்தன.

நியாயப் பிரமாணம், தீர்க்க தரிசனங்கள் நீங்கலாக உள்ள மற்ற பழைய ஏற்பாட்டு நூல்களை **'எழுத்துக்கள்'** என்ற தலைப்பின் கீழ் மூன்ருவது பகுதியில் வைக்கலாம். சாமுவேல், நாளாகமம், இராஜாக்கள் போன்ற வரலாற்று நூல்களும் சங்கீதம், உன்னதப்பாட்டு போன்ற கவிதை நூல்களும், இலக்கியம், தத்துவம் என்று சொல்லக் கூடிய வகைகளும் பிற எழுத்து வகைகளும் இந்த மூன்றாவது பகுதியில் காணக்கிடக்கின்றன. இவையாவும் வெவ்வேறு காலக் கட்டங்களில் எபிரேய மொழியில் எழுதப்பட்டனவைகள்.

வெகுகாலமாக நியாயப்பிரமாண நூல்கள் மட்டுமே புனித நூல்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறிய மற்ற நூல்களும் நாளடைவில் இறைவனால் அருளப்பட்டவைகள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு புனித நூல்கள் வரிசையில் இடம் பெற்றன. கி.மு- 430 வாக்கில் எஸ்ரு நெகமியா போன்ற வேத அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டு பஞ்சாகமத்துடன் இணைக்கப்பட்டு வேத அந்தஸ்து பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த வேதம் தான் இயேசு கிறிஸ்துவின் நாட்களில் வழக்கில் இருந்த யூத வேதம். இந்த வேதத்தைத் தான் இயேசு கற்றார்.

கி.மு. நான்காம் நூற்றாண்டின் மத்தியில் மாஸிடோனியா முன்னன் அலெக்சாந்தர், எகிப்து சின்ன ஆசியா பாரசீகம் போன்ற

நாடுகளை வென்று அவருடைய மொழியாகிய கிரேக்க மொழியை பொது மொழியாக்கியிருந்தார், அந்நாடுகளில் கணிசமான யூதர்கள் குடியேறியிருந்தனர். அவர்கள் எபிரேயம், அரமேயம் ஆகிய மொழிகளில் இருந்த தங்கள் சமய நூல்களை அன்றைய பொது மொழியாகிய கிரேக்கத்துக்கு மொழி பெயர்த்தனர். கி.மு. 285-247 வாக்கில் எகிப்து நாட்டை ஆண்டு வந்த பிலடெல்பஸ் என்பவர் இம்மொழியாக்கத்துக்கு ஆதரவு தந்தார் என்று கருதப்படுகிறது. எழுபது யூத ரபிகள் இம்மொழியாக்கத்தில் ஈடுபட்ட படியால் இதை செய்து வகிந்து என்று அழைத்தனர். செப்து வகிந்து என்ற கிரேக்கச் சொல்லுக்கு எழுபது என்று அர்த்தம். வெகு நாட்களாக அயல் நாடுகளில் வாழ்ந்து வந்ததால் தங்கள் தாய் மொழியை மறந்த நிலையில் இருந்து வந்த யூத மக்களுக்கு இது பேருதவியாக இருந்தது. கமாலியேல் பவுல் அடியார் போன்றவர்கள் கற்றது இந்த வேதத்தையே.

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்துக்குப் பிறகு தான் புதிய ஏற்பாடு உருவாயிற்று. புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்தி நூல்களும், இருபத்தி ஒரு கடிதங்களும், ஒரு வரலாற்று நூலும் ஒரு தீர்க்கதரிசன நூலும் இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் நற் செய்தி நூல்கள் முதலில் வைக்கப்பட்டிருந்தாலும் நிருபங்களே முதலில் எழுதப்பட்டவைகள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு அவருடைய அப்போஸ்தலர்களும், சீடர்களும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அவருடைய போதனைகளை பரப்ப தொடங்கினர். அவருடைய போதனைகளை ஏற்றுக் கொண்ட மக்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டு சபையாக இயங்கினர். அந்நாட்களில் இப்புதிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட மக்களுக்கு எதிர்ப்புகளும் துன்புறுத்தல்களும் மிகுதியாக ஏற்பட்டன. ஆகவே அப்போஸ்தலர்கள் விசுவாசிகளை ஊக்குவித்தும் ஆறுதல் கூறியும் சபைகளில் அவ்வப்பொழுது ஏற்படுகிற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், நற்போதனைகள் அளிக்கவும் அடிக்கடி கடிதங்களை எழுதினர். இந்தக் கடிதங்களை சபையார் மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்தனர்.

இந்த நிருபங்களுக்குப் பிறகுதான் இயேசுவே நேரில் அறிந்திருந்த சீடர்களும் அவர் பற்றிய உண்மைகளைக் கேட்டறிந்த பக்தர்களும் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுவது அவசியம் என்று உணர்ந்து இந்த நற்செய்தி நூல்களை எழுதினர். அவைகளே மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நற் செய்தி நூல்கள் அவைகள் யாவும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. ஆனால் இன்றைய ஏற்பாட்டில் காணப்படும் நூல்கள் தவிர வேறு பல நூல்களும, அந்த நாள் கிறிஸ்தவர்களிடையே

அப்போது பழக்கத்தில் இருந்தன. அவைகளின் போதனைகளுக்கும், மற்ற நூல்களில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்களுக்கும் முரணாகத் தோன்றினபடியால் கி.பி. 369-ல் வேத அறிஞர்கள் கூடி இந்நூல்களின் போதனைகளை ஆய்வு செய்து இவைகள் போலிகள், இடைச் செருகல்கள் என்று கண்டறிந்து தள்ளி விட்டனர். அதன் பிறகு யூதர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு குறிப்பிட்ட இன மக்களோடு தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையை **பழைய ஏற்பாடு** என்றும் (உபா 5:1-3) உலகின் அனைத்து மக்களோடும் செய்து கொண்ட உடன்படிக்கையை **புதிய ஏற்பாடு** என்றும் ஏற்றுக் கொண்டு (யோவான் 1:17) இரண்டையும் ஒன்றாக இணைத்து **விவிலியம்** அல்லது பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கின்றனர்.

**E. Z. செல்வநாயகம்**

---

**அப்போஸ்தலன் பேதுருவின் அறிவுரைகள்**

**ஊழியர்களுக்கு :** உங்களிடத்தில் உள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல மனப்பூர்வமாய், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல—உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல—மந்தைக்கு மாதிரியாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள். பலன்? அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

**இளைஞர்களுக்கு :** மூப்பர்களுக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்.

ஏன்? பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

# பரிசுத்த ஆவியும் கிறிஸ்தவர்களும்

சிலர் எங்களைக் குற்றப்படுத்துவதைப் போல நாங்கள் பரிசுத்த ஆவி இல்லையென்றோ அல்லது பரிசுத்த ஆவியானவர் செயல் இழந்து விட்டார் என்றோ நாங்கள் போதிப்பதில்லை, ஆவியானவர் முதலாம் நூற்றாண்டில் வெளிப்படுத்தி உறுதிப்படுத்திய புதிய ஏற்பாட்டில் தம்மைக் குறித்துத் தெளிவான முறையில் போதித்திருக்கிறார். அதன்படி அவர் இன்றும் ஜீவனோடும் வல்லமையோடும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் சில பேர் போதிக்கிறபடியும், நடந்து கொள்கிறபடியும் அல்ல.

நாங்கள் சொல்வதெல்லாம் அப் 3:38ன்படி மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக் கொண்டவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வரம் கிடைக்கும். அதன்படி அப் 2:41 சொல்லுகிற பிரகாரம் கர்த்தருடைய வசனத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு திருமுழுக்குப் பெற்றுக் கொண்ட 3000பேர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் பொய்யுரையாத தேவன் தாம் வாக்குக் கொடுத்தபடி செய்வார். அதனால் தான் அப் 5:32ல் ''தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் கலா 3:26-27;4:6 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்கள் அனைவரும் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். புத்திரராயிருக்கிற படியால் தேவனை அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை அவர்களுடைய இருதயங்களில் அனுப்புகிறார் என்கிறது மேலே சொன்ன வசனங்களைத் தொகுத்துப் பார்த்தால் ஒருவன் விசுவாசித்து, தன் பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்றும் கர்த்தர் என்றும் அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்காக திருமுழுக்குப் பெற்று தேவனுடைய பிள்ளையாக மாறினால் அவனுக்கு பரிசுத்த ஆவியைத் தருவேன் என்று உறுதி மொழி கொடுத்திருக்கிறார். அது அல்லாமல் ஒரு கிறிஸ்தவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார் என்பதைக் கீழ்க் காணும் வசனங்களும் ஆமோதிக்கின்றன (ரோமர் 8:9, 1கொரி 6:19;3:16) ஆனால் அப் 2-ம் அதிகாரத்திலிருந்து 6-ம் அதிகாரம் வரை திருமுழுக்குப் பெற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட சில ஆயிர மக்களில் அப்போஸ்தலர் தவிர வேறு எவரும் அற்புத அடையாளங்கள் செய்ததாக நாம் வாசிப்ப தில்லை. ஏனெனில் அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்று அற்புத அடையாளங்கள் செய்யும்

வல்லமையைப் பெற்றிருந்தார்கள். பலர், மேல் அறையில் கூடியிருந்த 120 பேரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று தவறாக நினைத்துக் கொண்டு, அவர்களுக்குக் கொடுத்த தேவன் நமக்கு ஏன் கொடுக்கமாட்டார் என்று பிடிவாதமாய் பல முயற்சிகளைச் செய்து கொண்டு தாங்கள் குழப்பம் அடைந்திருப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் மற்றவர்களையும் குழப்பிக் கொண்டு அலைகிறார்கள்.

தெருவில் நடமாடும் குடுகுடுப்பைக் காரனைக் கவனித்துப் பார்த்தீர்களானால் அவனுடைய சொல்லாட்சியில் ''ஜென்மத்தில் சனி'' என்ற சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்துவான். அதாவது ஆரம்பத்திலேயே சிக்கல் என்று பொருள். அதைப் போன்று அன்று அங்கே ஏற்பட்ட குழப்பம் இன்றுவரை கிறிஸ்துவத்தைக் குழப்பிக்கொண்டிருக்கிறது. அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் வேத வசனம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

(அ) இயேசு தமது அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியின் திரு முழுக்குப் பெற்றுக் கொள்வதற்கு எருசலேமில் காத்திருங்கள் என்று சொல்லியிருந்தார். (லூக் 24:49; அப் 1:3-5).

ஆ) பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டுஒரிடத்திலே வந்திருந்தார்கள். இந்தஅவர்கள் எல்லாரும் என்ற பெயருரிச் சொல் அப்போஸ்தலரையே குறிக்கும். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு நாற்பது நாள் வரை தம்முடைய சீஷர்களுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தரிசனம் கொடுத்துவிட்டுப் பரமேறிச் சென்றார் (அப் 1:4) அதன்பின்பு அப்போஸ்தலர்களும் மற்றும் சீஷர்கள் சுமார் நூற்றிருபது பேர் மேல் அறைக்குச் சென்று ஜெபித்தனர். அப்பொழுது யூதாஸ் காரியோத்துக்குப் பதிலாக மத்தியாஸ் என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டார் (அப் 1:13-26) அந்த வேலை முடித்தபிறகு அப்போஸ் தலர்கள் தவிர மற்றவர்கள் தங்கள் தங்கள் இடத்துக்குச் சென்றிருக்கக் கூடும், ஏற்கனவே நாற்பது நாட்களாக இயேசு உயிர்த்தெழுந்த பரபரப்புச் செய்தியால் சீஷர்கள் தங்கள் வேலை வெட்டிகளையும் வீடு வாசல்களையும் மறந்து எருசலேமில் காத்துக் கிடந்தனர். இப்பொழுது இயேசு பரமேறிச் சென்றுவிட்டார். அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி பகர அப்போஸ்தலர் களையும் நியமித்தாயிற்று. இனிஅவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று மற்றவர்கள் தங்கள் பணிகளைக் கவனிக்கப் பிரிந்து சென்றிப் பார்கள். ஆகவே புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட மத்தியாஸீம் மற்ற பதினொரு அப்போஸ்தலரும் தான் இருந்திருக்க சாத்தியக் கூறுகள் இருக்கின்றன (அப் 1;26 ஐயும் பார்க்க)

இ) அப் 2:7ல் பேசுகிற இவர்கள் எல்லோரும் கலிலேயரல்லவா? என்று கேட்கப்படுகிறது. அப்போஸ்தலர்களில் யூதாஸ்காரியோத் தவிர மற்றவர்கள் அனைவரும் கலிலேயர் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் அந்நிய பாஷையில் பேசினது 120பேராக இருந்திருந் தால் அவ்வளவு திரளான கூட்டத்தில் பேசினவர்கள் கலிலேயரா அல்லது வேறு நாட்டவரா என்று கண்டு கொள்ளுவது சாத்தியமில்லை
ஈ) அப் 2:14ல் பேதுரு பதினொருவரோடும் கூட நின்று'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இந்த பனிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டும் தனிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்? சிந்திப்பீர்!

உ) புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகிய கிரேக்கத்தில் இந்த மனிதர்கள்'' என்று அர்த்தம் கொடுக்கும் ''சொல்'' பயன் படுத்தப் பட்டிருக்கிறது ஆனால் துர்அதிஷ்டவசமாக தமிழிலும் ஜேம்ஸ் அரசின் ஆணையின் பேரில் மொழியாக்கம் செய்யப்பட்ட (King James Version) ஆங்கில வேதாகமத்திலும் 'இவர்கள்' என்ற பொதுப்படையாக மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறதால் பெண்களும் இருந்திருப்பார்ளோ என்று சிலர் குழப்பம் அடைந் திருக்கிறார்கள். நல்ல வேளையாக R.S.V; N.I.V; போன்ற திருத்திய மொழிபெயர்ப்புகளில் மூல மொழிக்குச்சமமான These man'' என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றவர்கள் 120 பேர் என்போமானால் அந்த 120 பேரில் பெண்களும், இருந்திருக்கிறார்கள். (அப் 1:14) ஆகவே 120 பேராக இருந்திருக்க முடியாது. "Thes men" என்பது ஆண்களை மட்டுமே குறிக்கும் அது பனிரண்டு அப்போஸ்தலர்களே. அந்த அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு முன்பு ஒருபோதும் கற்றறியாத மொழிகளில் அந்தந்த மொழியினர் புரிந்து கொள்ளும் வகையில் பேசினார்கள்.

2) 2:14-36 அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்துக்கு ஆவி-யினால் ஏவப்பட்ட வியாக்கியானம் செய்தார்.

3) அப் 2;43 அப்போஸ்தலர்களால் அநேக அற்புதங்களும் அடை யாளங்களும் செய்யப்பட்டன

4) அப் 3:1-11 அப்போஸ்தலர்கள் பேதுருவும் யோவானும் ஒரு பிறவி முடவனுக்கு உடனடி சுகம் கொடுத்தார்கள்.

5. அப் 4:14-16 அப்போஸ்தலர்களால் எவராலும் மறுக்க முடி-யாத அளவுக்கு அற்புதம் நடைபெற்றிருக்-கிறது என்று அவர்களுடைய எதிரிகளாகிய ஆலோசனை சங்கத்தாரே அறிந்து கலங்கினார்கள்.

6. அப் 4:33 கர்த்தராாகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள்.

7. அப் 5:12 அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் மக்களுக்குள் செய்யப்பட்டன.

8. அப் 5:15,16 பேதுரு தலைமையில் அப்போஸ்தலர்கள் தங்களிடம் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் குணமாக்கினார்கள்.

அப்போஸ்தலர்களால் நடப்பிக்கப்பட்டதாக மேலே சொல்லப்பட்டிருக்கிற எட்டு அற்புத அடையாளங்களைத் தவிர அப்போஸ்தலர் நடபடிகள் ஆறாம் அதிகாரம் வரை வேறே எங்கேயும் எவராலும் அடையாளங்கள் செய்யப்பட்டதாக ஆதாரம் இல்லை. மேலே சொன்ன பெந்தேகோஸ்தே நாளில் தங்கள் பாவ மன்னிப்புக் சென்று திருமுழுக்குப் பெற்றுக் கொண்ட 3000 பேர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். அப் 4:4-ல் 5000 ஆண்களும் கணக்குச் சொல்லப்படாத பெண்களும் திருமுழுக்குப் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருப்பர். அப் 5:14ல் திரளான மக்கள் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அப்படியானால் அவர்களும் திருமுழுக்குப் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பார்கள். இப்படி ஆயிரக்கணக்கான மக்கள் திருமுழுக்குப் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைத் தவிர வேறொருவரும் அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைப் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அப்போஸ்தலர்கள், ஸ்தேவான் மற்றும் பிலிப்பு உட்பட ஏழு பேர் மேல் தங்கள் கைகளை வைத்தார்கள். அதற்குப் பிறகே அப்போஸ்தலர்கள் அல்லாத ஸ்தேவான் பிலிப்பு என்பவர்கள் அற்புதங்கள் செய்ததாகப் பார்க்கிறோம் (அப் 6:5,6,8 அப் 8:6) அதற்கு என்ன பொருள்? அப்போஸ்தலர் நடபடிகள் 6-ஆம் அதிகாரம் வரை அநேகர் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிந்து திருமுழுக்கும் பரிசுத்த ஆவியும் பெற்றிருந்தும் அவர்களில் ஒருவரும் அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைப் பெற்றிருக்கவில்லை என்றும், 6-ம் அதிகாரத்திலும் 8-ம் அதிகாரத்திலும் அற்புத அடையாளங்களை நடப்பித்த ஸ்தேவானும் பிலிப்பும் அப்போஸ்தலர்கள் கை வைத்த பிறகே அந்த வரத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்றும் அறிகிறோம்.

அதே போல யோவான் ஸ்நானகன் விஷயத்தைக் கூடப் பாருங்கள். அவர் தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார் என்றும் (லூக்கா 1:15) ஆனாலும் அவர் ஒரு அற்புத அடையாளமும் செய்யவில்லை என்றும் பார்க்கிறோம் (யோவான் 10:41) பவுல் அப்போஸ்தலன் கொரிந்து

சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தில்'' .... எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? என்று கேட்கிறார் (1கொரி 2:29,30) அந்தக் கேள்வியில் தொக்கி நிற்கிற பதில்.... எல்லாக் கிறிஸ்தவர்களுக்குமே அற்புத அடையாளம் செய்யும் வரம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்பது தான். இந்தக் கேள்வி கேட்கப்பட்ட காலம் முதலாம் நூற்றாண்டு. இந்த நாட்களில் அற்புத அடையாளம் செய்யும் வரம் அமுலில் இருந்தது என்பதை நினைவு கூர்க. இருந்த போதிலும் எல்லா கிறிஸ்தவர்களுமே அற்புத அடையாளங்கள் செய்யவில்லை.

மேற்சொன்ன மூன்று வழிகளிலும் (அதாவது அப்போஸ்தலர் நடபடிகள் 2 முதல் 6 அதிகாரம், யோவான் ஸ்நானகன், கொரிந்தியக் கிறிஸ்தவர்கள்) சந்தேகத்துக்கிடமில்லாமல் நாம் தெரிந்து கொள்கிற காரியம் என்னவென்றால் ஒருவன் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தாலும் அற்புத அடையாளங்கள் செய்ய முடியாது. சிறப்புப் பணிகளை ஆற்ற வேண்டும் என்று கர்த்தர் குறித்த சிறப்பு மனிதர்களாகிய அப்போஸ்தலர்களும் அவர்களால் கை வைக்கப்பட்ட சில விசேஷித்த நபர்களும் தான் செய்ய முடிந்தது.

அப்படியிருக்க இன்று நீங்களும் நானும் அதை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புவதும் தேவ சித்தத்துக்கு இசைவு தானா? சிந்திப்பீர்!

தமிழில் **E.Z. செல்வநாயகம்** மூலம் **சார்லஸ் டீ பால்மா**

---

**சோதனை வருவது தேவனால் அல்ல; நீயே தேடிக் கொள்வதுதான்.**

சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக, தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுபவரல்ல, ஒருவனையும் சோதிக்கிறவருமல்ல.

அவனவன் தன் தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்.

---

# இரட்சிக்கப்பட்ட பிறகும் நித்திய ஜீவனை இழந்துவிடக்கூடும்?

ஒருவன் இரட்சிக்கப் பட்டபிறகும் நித்திய ஜீவனை இழந்து போகக்கூடும் ஒன்பது வேதாகமத்தில் காணப்படும் கசப்பான ஆனால் தெளிவான ஒரு எச்சரிப்பு.

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சம்பாதிக்கப்பட்ட (இரட்சிக் கப்பட்ட) சிலர் (அப்.20:28; 1 பேதுரு 1;18-19) தங்களுக்குத் ''தீவிரமான அழிவை'' வருவித்துக் கொள்ளுவார்கள் (2 பேதுரு 2:1), ''அழிவு'' என இங்கு கூறுப்பிடப்பட்ட வார்த்தைக்கு ''உண்மையான அல்லது நித்திய ஜீவனை இழந்து போய், நித்திய தரித்திரத்தில் (நரகத்தில்) தள்ளப்படுவர்'' என பொருளாகும்.

மறுபடியும் பிறப்பவர்களே ''கிறிஸ்துவுடையவும் தேவனு-டையவும் இராஜ்ஜியத்திற்குள்'' இருப்பர் (யோவான் 3:5; எபே 5:5). ஆனால், ''மனித குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்பு-மார்: அவர்கள் அவருடைய இராஜ்ஜியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமம் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்-களை அக்கினி சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத் 13:41-42). என்வே மறுபடியும் பிறந்தவர்களிலும் சிலர், தவறிப் போகிற காரணத்தால், ஆக்-கினைக்கு ஒப்புக் கொடுக்கப்படுவர் என்பது மேலே கண்ட வசனத் தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேவனை அறிவதே நித்திய ஜீவனை அடைவதற்காகத்தான் (யோவான் 17:3). என்றாலும் தேவனை அறிந்தும் நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையுள்ள பலர், அவரை மறந்து போகின்றனர். ''ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்து விட்டார்கள்'' (எரே. 2:32). என தேவன் கூறுகிறார். தேவனை அறிந்து அவரை மறந்து போகிற-வர்கள் நரகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர். ''தேவனை மறந்த-வர்கள் நரகத்திலே தள்ளப்படுவர் சங்.9:17) என தாவீது அரசன் கூறுகிறார். தேவனை ஒருபோதும் அறியாத ஒரு மனிதன் அவரை மறக்கக்கூடுமோ?

ஜீவனுடையவர்களின் பெயர்களே ஜீவ புத்தகத்தில் இடம் பெறு-கின்றன. ஆனால், தேவன் சிலருடைய பெயர்களை ஜீவ புத்தகத்-திலிருந்தே கிறுக்கிப்போடுவார் (யாத். 32:33; வெளி.3:5). ஜீவ புத்-

தகத்திலிருந்து ஒருவனுடைய பெயரை தேவன் எடுத்துப் போடு மளவிற்கு அவர் வாழ்க்கை கெட்டுப் போயிருக்குமானால், அவன் நித்திய ஜீவனை இழக்கிறான்.

தேவனுடைய ஒருவன் பிள்ளையானவன் ''சுவிசேஷத்தின் நம்பிக்கையை விட்டு அசையும்'' சாத்தியக் கூறுகள் உள்ளன.

(கொலோ 1:22)

சுவிசேஷத்தின் நம்பிக்கையானது மகிழ்ச்சியுடையதாகவும்' நித்திய இரட்சிப்பை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கக் கூடியதாகவும் இருக்கிறது. ''இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்''.

(1 கொரி 10:12)

''சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்''.

(எபி 3:12)

S.F. ரெயின்ஸ் தமிழில்: S.S. ராஜன்

28-ம் பக்க தொடர்ச்சி

தேவனுடைய வசனத்தின்படி நடவாத காரணத்தால், நியாயமாகவும் உண்மையாகவும் நடக்கும் நல்ல மனிதர்களும் இரட்சிப்பை இழந்து போகிறார்கள். நாம் இரட்சிப்படைய நமது சட்ட நூலாகிய வேதாகமத்தை மட்டுமே பின்பற்ற வேண்டும். இல்லையேல் இரட்சிப்பு **நிச்சயமாக** இல்லை.

**பஃபோர்ட் சி. ஹோல்ட்** **தமிழில்: S.S. ராஜன்**

# இருளிலிருந்து ஒளியை நோக்கி.

''இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்! அவர் மூலமாக நாம் இந்த கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம். (ரோமர் 5:1-2).'' இந்த கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருக்கிற படியால்''. தேவனுடைய கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை அடையத்தக்க விசுவாசத்தை நாம் எங்கிருந்து பெறுகிறோம் என்ற கேள்வி எழுகிறது. அப்போஸ்தலர் பவுல் மூலமாக பரிசுத்த ஆவியானவர் கூறினார். ''விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17). ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க, அதைப் படிக்க வேண்டும் அல்லது போதிப்பதைக்கேட்க வேண்டும். ஏனெனில் அது ''கேள்வி''யினால் வருகிறது. வேதாகமத்தினால் ஒருவன் பயனடைய (இரட்சிப்படைய) வசனத்தை தனது இருதயத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும், அதாவது கீழ்ப்படிய வேண்டும், தேவனுடைய வசனத்திற்குக் குறைவான எதுவும் மனிதனை இரட்சிக்காது. அதே சமயத்தில், தேவனுடைய வசனத்திற்கு மிஞ்சிய எதுவும் ஒருவனை மனிதனுடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிய வைத்து விடும் ''நியாய உணர்வுடனும், நல்லவனுமாக நடந்தால் நீ இரட்சிப்படைய போதுமானது'' என யாராவது போதித்தால், அவ்வாறு போதிப்பதற்கான ஆதாரத்தை அவர் சுவிசேஷத்திலிருந்து எடுத்துக்காட்டத் தயாராக இருக்க வேண்டும். சுவிசேஷத்தில் அதற்கான ஆதாரத்தைக் காட்ட முடியா விட்டால் உடனே அந்நபர் தனது தவறான போதனைக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டு ''விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17)என்ற வேதாகம உபதேசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## விசுவாசம் பல வகைப்படும்

பலவகையான விசுவாசம் பற்றி வேதாகமம் கூறுகிறது. 'பொதுவான விசுவாசம்'' (தீத்து 1·4) 'பூரணப்பட்ட விசுவாசம்' (யாக்கோபு 2:22) ''கிரியையற்ற செத்த விசுவாசம்'' (யாக் 2:26); ''பலத்த விசுவாசம்'' (லூக் 7:9). சகல மக்களுக்குரிய விசுவாசம் ''பொதுவான விசுவாசம்'' எனப்படுகிறது. கிரியையில்லா விசு

வாசம். தேவனுடைய கட்டளைகள் யாவற்றையும் கடைபிடிக்கச் செய்யும் விசுவாசம் கிரியையுள்ளதும், ஜீவனுள்ளதுமாகும்; கீழ்ப் படிதலில் பூரணப்பட்டது.

## நான் எதை விசுவாசிக்க வேண்டும்?

மாறுபாடான பல கருத்துக்களை கேட்டு வரும் மக்கள் அடிக்கடி பெருங் குழப்பத்தில் ஆழ்ந்து போகின்றனர். ''எதைச் செய்வது, எதை நம்புவது என நான் எவ்வாறு கண்டு பிடிப்பது?'' என மக்கள் கேட்கின்றனர். தீர்க்கத்தரிசி எரேமியா இஸ்ரவேல-ருக்குத் தெரிவித்ததைக் கேளுங்கள். ''வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும், என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ நாங்கள் நடக்க மாட்டோம் என்-கிறார்கள்'' (எரேமியா 6:16) இன்றைய நாட்களிலே நாம் கேட்-கும் சகல போதனைகளுக்கும் மேலே கூறிய அளவு கோலை பயன் படுத்த வேண்டும் அதாவது நல்லவழி (வேதாகம வழி) எங்கே என்று விசாரித்து, அதிலே நடக்க வேண்டும் ஒரு வாலிப போத-கனிடம் பவுல் கூறினார். ''நீ வெக்கப்படாத ஊழிக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' (2 தீமோ 2,15) கிறிஸ்துவைப்பற்றி பவுல் போதிப்பதைக் கேட்ட பெரோயா பட்டணத்து மக்களைப் போல, ''மனோவாஞ்சையாக வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா. என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து (அப் 17:11) பார்ப்பவர்களாக நாம் இருக்க வேண்டும்.

வேதாகமத்தைப்பகுத்துப்படித்து, அப்போஸ்தலர்கள் கடை-பிடித்தவைகளையும், பிறர் கடைபிடிக்க அவர்கள் போதித்தவை களையும் அறிந்து, அக்கட்டளைகளுக்கு மட்டுமே நாமும் கீழ்ப்-படிந்து நடந்தால், நாம் சரியான பாதையிலே நடப்பவராக இருப்போம் ஏனெனில், மனிதனுடைய மாறுபாடான உபதேசங்-களுக்கு கீழ்ப்படிந்து சபிக்கப்பட்டவனாக இராமல் (கலா 1:6-9) பவுல் போதித்தவைகளே மட்டுமே கடைபிடிப்பதால், தேவனுடைய கட்டளைகளுக்கு மட்டுமே கீழ்ப்படிகிறோம்.

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா கட்டளைகளின் படியும் நாம்நடந்தால் நித்திய ஜீவனை அடைவது நிச்சயம்.

 26-ம் பக்கம் பார்க்கவும்,

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

பல வாசகர்கள் 1988, 1989, 1990 ஆகிய ஆண்டுகளுக்கான திருமறை ஆசான் இதழ்கள் மொத்தமாக ''பைண்ட்'' செய்தது வேண்டும் என்று கேட்டு எழுதுகிறார்கள். ஆனால் எங்களிடம் சில மாதக்களுக்கான இதழ்கள் கைவசமில்லை.

உங்களிடம் ஷை ஆண்டுகளுக்கு உரிய பழைய திருமறை ஆசான் இதழ்கள் கைவசம் இருந்தால் (எந்த ஆண்டு எந்த மாதம் என்றாலும் பரவாயில்லை) தயவு செய்து அனுப்பி உதவுங்கள். மிக்க உபகாரமாக இருக்கும். நன்றி.

**ஆசிரியர்**

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

TO

PRINTED MATTER BOOK-POST

undelivered please return to
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE-638 002.